தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். ப. முரளி அர்த்தனாரி Ph.D.,
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

---

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 25.6.2019

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

**உண்டு உறைவிடப் பள்ளிகளில் சத்தான காய்கறி தோட்டங்களை அமைப்பதற்கான பயிற்சி பட்டறை**

கோவை தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் கஸ்தூரி பாய் காந்தி பாலிகா வித்யாலயா உண்டு உறைவிடப் பள்ளிகளில் சத்தான காய்கறி தோட்டங்களை அமைப்பதற்கான செயல் திட்டம் தீட்டுதல் பற்றிய பயிற்சி மற்றும் பட்டறை இன்று (25.6.2019) நடைபெற்றது. இவ்விழாவில் பல்கலைக்கழக துணைவேந்தர் முனைவர் நீ. குமார் அவர்கள் வாழ்த்துரை வழங்கினார்.

தமிழ்நாட்டில் பெண் குழந்தைகள் மற்றும் நலிவுற்ற சிறுவர்கள் ஆகியோரின் கல்வி முன்னேற்றத்திற்கு 61 கஸ்தூரி பாய் காந்தி பாலிகா வித்யாலயா (KGBV) மற்றும் 11 ACCESS உண்டு உறைவிடப் பள்ளிகள் செயல்பட்டு வருகின்றன. இவை பெண் குழந்தைகளின் கல்வியில் இடைநிற்றலை தவிர்த்து அவர்கள் சீரிய முறையில் இடைநிலைக் கல்வியை பயில வழிவகை செய்கின்றன. பெரும்பாலும் மலைப்பகுதிகள் மற்றும் பின்தங்கிய வட்டாரங்களில் உள்ள சிறுவர் சிறுமியரின் கல்வி வளர்ச்சிக்கு இவை உரிய பங்காற்றுகின்றன.

இந்த உண்டு உறைவிடப் பள்ளியில் பயிலும் மாணவ மாணவியருக்கு அவர்தம் தொழில்நுட்ப திறன்களை மேம்பாடு அடைய செய்யும் வகையில் பல்வேறு திறன் மேம்பாட்டு பயிற்சிகள் மாலை நேரங்களில் நடத்தப்பட்டு அதன் வாயிலாக அவர்கள் பல்வேறு சிறுகுறு தொழில்களை கற்றுக் கொள்கின்றனர்.

குறிப்பாக விளையாட்டு பொம்மைகள், கூடைகள், கைவினைப் பொருட்கள் போன்றவற்றை செய்வதில் பயிற்சி பெறுகின்றனர். இது தவிர கணினி, தற்காப்பு கலை மற்றும் யோகா பயிற்சியும் அளிக்கப்பட்டு வருகிறது.

இதில் பெரும்பாலான பிள்ளைகள் வேளாண் சார்ந்த குடும்பங்களில் இருந்து வருவதால் அவர்களுக்கு ஊட்டச் சத்து தோட்டக்கலையில் பயிற்சி அளிப்பதன் மூலம் அவர்களுக்கு உரிய காய்கறிகள், பழங்கள் மற்றும் கீரை வகைகளை உரிய விஞ்ஞான முறைப்படி அவர்களே உற்பத்தி செய்து கொள்ள ஏதுவாக அமையும்.

முதன்முதலில் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தின் சந்தியூர் வேளாண் அறிவியல் நிலையம் வாயிலாக சேலம் மாவட்டம் பெத்தநாயக்கன்பாளையம் வட்டாரத்தில் உள்ள கஸ்தூரி பாய் காந்தி பாலிகா வித்யாலயாவில் ஒரு சிறிய அளவில் பயிற்சி அளிக்கப்பட்டு அந்த மாணவிகள் சிறப்பான வகையில் காய்கறிகள் – வெண்டை, கத்தரி, தக்காளி, முட்டைகோஸ், கீரை வகைகள் போன்றவை உற்பத்தி செய்தனர்.

பொதுவாக புத்தம் புதிய காய்கறிகளை மாணவிகள் உணவில் சேர்த்து கொள்ளும் போது அதன் தரம் மிகுந்து இருக்கும். குறிப்பாக விட்டமின் சத்துக்கள், தாது சத்துக்கள், புரோட்டீன் போன்ற சத்துக்கள் நல்ல முறையில் கிடைக்க வழிவகை ஏற்படுகிறது. அது மட்டுமல்லாமல், புத்தம் புதிய காய்கறிகளை நாம் உணவில் எடுத்துக் கொள்ளும் போது அதனை அதிக அளவில் சாப்பிட தூண்டுதலாக இருக்கும். எனவே, மாணவிகள் அவர்களின் உணவில் அதிக அளவில் காய்கறிகள் எடுத்துக் கொள்ள முடியும். இதுவும் சிறந்ததாக உள்ளது.

மேலும் இந்த மாணவிகளுக்கு பள்ளியில் கிடைக்கும் அங்கக கழிவுகளை மக்க வைத்து அதன்மூலம் உரம் தயாரிக்கும் பயிற்சியும் அளிக்கப்படுகிறது. இதனால் மாணவ மாணவிகளுக்கு இந்த சிறிய வயதிலேயே திடக்கழிவு மேலாண்மை குறித்த ஒரு சரியான விழிப்புணர்வு கிடைக்கவும் பள்ளி பருவம் முடிந்த பின்னர் அவர்கள் ஊரில் வாழும் கிராமத்தில் திடக்கழிவு மேலாண்மை நிபுணராகவும் வாய்ப்பு உள்ளது. எனவே, இது கிராம நிர்வாகத்திற்கும் ஒரு மிகுந்த பயனை அளிக்க வல்லது.

இந்த மாணவ மாணவியர் பள்ளிப் பருவம் முடித்து பின்னர் தங்கள் வீட்டிலேயே சிறிய அளவிலான இக்காய்கறி தோட்டங்களை அமைக்கும் போது அவர்கள் குடும்பத்தின் ஒட்டுமொத்த காய்கறி எடுத்துக் கொள்ளும் அளவு மேம்படுத்தப்பட்டு அவர்களின் ஊட்டச்சத்து நிலையும் மேம்பாடு அடையும் என்பது திண்ணம். எனவே மாணவ மாணவியர் வேளாண் பல்கலைகழகத்துடன் இணைந்து இத்திட்டத்தினை சிறந்த முறையில் செயல்படுத்தி அவர்களின் முன்னேற்றத்தையும் உறுதி செய்யுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

மக்கள் தொடர்பு அலுவலர்